# மதுரைக்காஞ்சியில் இயற்கை

***முனைவர் கா. சந்தான லெட்சுமி***
இணைப்பேராசிரியர்
மன்னர் துரை சிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை
https://doi.org/10.5281/zenodo.14383118

**முன்னுரை**

*இலக்கிய பாடுபொருள்களில் இயற்கையும் ஒன்றாக அமைகிறது. இலக்கிய பாடு பொருள் அனைத்திலும் இயற்கையும் இணைந்து வருவதே தமிழ் இலக்கியங்களின் சிறப்பாகிறது. தமிழர் வாழ்வியலின் ஒவ்வொர் நிகழ்வும் இயற்கையையே அடித்தளமாகக் கொண்டு அமைகிறது. இயற்கையின் அடிப்படையிலான ஐந்திணை வாழ்வியலே அன்பின் ஐந்திணை வாழ்வியலானது. அதனால் தான் பொருளிலக்கணம் கண்ட ஒரே மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. இத்தகைய தனித் தன்மைகளை உடைய இலக்கியங்களில் ஒன்றான மதுரைக் காஞ்சியில் இயற்கை விவரிக்கப்படுவதை இக்கட்டுரை காண விழைகிறது.*

**மதுரைக்காஞ்சி படைப்பின் நோக்கம்**

*தமிழ் வாழ்வியலைக் கூறியதோடு வரையறுக்கப்பட்ட வாழ்நாள்களை உடைய மனித இனம். அந்த வாழ்நாட்களை எவ்வாறு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் பாடப்பட்ட நூலாக மதுரைக் காஞ்சி அமைகிறது. தமிழ்மொழி என்றாலே இனிமை, அழகு, இளமை என பொருள் கொள்ளும் வகையில் எண்ணற்ற படைப்புக்களின் இருப்பிடமாகத் திகழ்கிறது. மதுரைக்காஞ்சியில் மதுரையின் ஒரு நாள் நிகழ்வுகள் படத்தொகுப்பாக இடம் பெறுகின்றன. அதில் இயற்கை அழகின் காட்சி வருணைகள் முக்கிய இடம் பெறுகின்றன. மதுரையின் அனைத்து நிகழ்வுகளையும் கூறி பாண்டிய மன்னனின் வாழ்வியல் நோக்கத்தை எடுத்துக் கூறும் விதமாக மதுரைக்காஞ்சி படைக்கப்பட்டுள்ளது.*

*போர் அழிவுகளில் முதலிடம் பெறுவது இயற்கையே ஆகும். இயற்கை வளம் அழிக்கப்படும் பொழுது அந்நாட்டின் பொருளாதார நிலைமையும் அழிக்கப்படுகிறது. இந்நிலை ஏற்படும் நாடுகளில் நடைமுறை வாழ்வியலைத் தாண்டி படைப்புருவாக்கம் எளிதானது அல்ல. அழிக்கப்படும் நாடு இயற்கை வளங்களை மீண்டும் அடைவதற்குள் பகை நாட்டின் வெற்றி வலிமையுடையதாகி விடும். மக்கள் வாழ்வியலுக்கு அடிப்படையான விளைநிலங்களை நீர் நிலைகளை அழித்தல் என்பது அக்கால போர் முறைகளில் ஒன்றாக அமைந்திருந்தது.*

*“நாடெனும்பேர் காடாக” என்ற மாங்குடியாரன் மனக்குமுறல் போரினால் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவினால் ஏற்பட்டதாகும். இதனால்தான் காடுகளைத் திருத்தி புதிய இருப்பிடங்களை உருவாக்க வேண்டியிருந்தது. இவைகளே “புத்தூர்” எனவும் வழங்கலாயிற்று. மதுரையே கடம்ப வனமாக இருந்த இடம் எனக் கூறப்படுகிறது. இக்காடுகளை அழித்து மக்கள் வாழ்வியலுக்கு உரய மதுரமான இடமாக்கியதால் மதுரை எனப் பெயர் பெற்றது எனலாம்.*

*தட்சன் தலைமையிலான நாகக் கூட்டங்கள் வாழ்ந்த காட்டுப் பகுதியே அர்ச்சுனால் எரயுட்டப்பட்டு “இந்திர பிரஸ்தமாக” மாறியது என்பதை மகாபாரதம் காட்டுகிறது. இன்றும் கூட நகரங்கள் விரவடையும் பொழுது அதனை ஒட்டியுள்ள பகுதிகள் சீராக்கப்பட்டு புறநகராக்கப்பட்டு குடியிருப்புக்களாக மாற்றப்படுவதைக் காண முடிகிறது.*

*எனவே இயற்கை என்பது நாட்டின் வளமையாகும் வெற்றியின் அடையாளமாகும் இயற்கையின் வளமையை ஒட்டியே மனித வாழ்வும் அமைகிறது என்பதாலே புலவர்களின் பாடுபொருள்களில் இயற்கை இதயமாகத் துடிக்கிறது.*

**மதுரைக்காஞ்சியின் இயற்கை**

*பருவங்கள் பறவைகள் மலர்கள் யாவும் தத்தமக்கு ஏற்ற சூழ்நிலைகளில் வைத்துப் புலவர்களால் உருவாக்கப்பட்டுக் கவிதைகட்குப் புத்துணாவும் கருத்தழகும் நல்குகின்றன. இத்தகைய புத்துணர்வே தமிழின் சீரளமைக்கு காரணமாகிறது. தமிழான் பொருளிலக்கணம் பற்றி பேசிய தொல்காப்பியரும் முதல் கரு என்று இயற்கையையே முதன்மைப்படுத்தி உள்ளார். அதனாலே, தொல்காப்பியர் ''முதலெனப்படுவது நிலமும் பொழுதும்'' என்கிறார். இயற்கையின் வெளப்பாடாக உலகியலை காண்பதால் தான் தொல்காப்பியர்,*

***''நிலம் நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்***
***கலந்த மயக்கம் உலகம்''***

***(தொல் - மரபு - 90)***

*என்றுரைக்கிறார். ''இயற்கை என்பது இயல்பானது மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்'' இயற்கை சுயம்புவானது அதன் உருவாக்கமும் அதாவது அழிவும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். ''மனித சமூகத்திற்கும் இயற்கைக்குமிடையிலான உறவை விளக்குவதே சூழலியலாகும்.'' இச் சூழலியலே மனித வாழ்வியலுக்கு அடிப்படையாகிறது. முதல், கரு, உர என்ற அடிப்படையிலான திணை வாழ்க்கை தமிழருக்கே உரியது ஆகும். இயற்கையின் இயக்கத்தையே ஒருங்கே நம் மனக்கண் முன் நிறுத்தும் காட்சிப் படிமங்களில் அக்காலத்திய மனிதனின் இயற்கை அறிவும் உணர்வும் நம்மிடையே கற்றலையும் இயற்கையை பேணுதலையும் வேண்டுகின்றன.*[4]

*இவ்வேண்டுதலே இயற்கை வாழ்த்தாக சிலப்பதிகாரத்தில் திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும், காவிர போற்றுதும் என்ற போற்றிகளைத் தமிழர்களுக்குத் தந்தது. சங்க இலக்கியங்களிலே நீண்ட நெடும் பாடலாகக் கருதப்படும் மதுரைக் காஞ்சியின் தொடக்கமும் இயற்கையின் பேராற்றலை போற்றுதும் விதமாகவே அமைகின்றது.*

***''ஓங்குதிரை வியன் பரப்பின்***
***ஒலி முந்நீர் வரம்பு ஆகத்***
***தேன் தூங்கும் உயர் சிமைய***
***மலை நாறிய வியல் ஞாலத்து''***

***(மதுரைக்காஞ்சி 48 - 51)***

*நீர்ப்பரப்பின் உயர்ந்த அலைகளையும் அகன்ற முழக்கத்தையும் உடைய கடலை எல்லையாகக் கொண்டது. தேன் கூடுகள் தொங்குகின்ற உயர்ந்த உச்சியுடைய மலைகளைக் கொண்டது இந்த உலகம் என மதுரைக்காஞ்சியில் மாங்குடியார் பாடியுள்ளார்.*

*''நீராரும் கடலுடுத்த நிலமடந்தை'' என்றே தமிழ்த்தாய் வாழ்த்தும் தொடங்கு வதிலிருந்து நீருக்கு தமிழர்கள் தந்துள்ள முதன்மையைக் காட்டும். ''நீரன்றி அமையாது உலகுசுசு என்பது குறளாகும். ஆற்றங்கரைகளே நாகாகத்தின் தொட்டில்கள் என்பது நீரின் தேவையைக் எடுத்துரைக்கும். இதனால்தான் அகழ் வாராய்ச்சிகள் ஆற்றுப்படுக்கைகளை ஒட்டியே பெரும்பாலும் நடைபெறுவதைக் காண முடிகிறது. உலகின் பெரும்பான்மையான பகுதி நீரால் சூழப்பட்டது என்ற அறிவியல் கருத்தையும் மதுரைக்காஞ்சி வரிகள் முன்வைக்கின்றன.*

***காற்று, ஞாயிறு, திங்கள், மழை என்ற பிரபஞ்ச சக்திகள் முறைப்படி செயல்படுவதாலே நாட்டின வளமும் முறைப்படி காக்கப்படும் என்பதை மதுரைக்காஞ்சியின்***

***வல மாதிரத்தான் வளி கொட்ப***
***வியல் நாள் மீன் நெறி ஒழுக***
***பகற் செய்யும் செஞ்ஞாயிறும்***
***இரவு செய்யும் வெண் திங்களும்***
***மைதீர்ந்து கிளர்ந்து விளங்க***
***மழைதொழில் உதவ மாதிரம் கொழுக்க''***

***(மதுரைக்காஞ்சி 5 -10)***

*என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. மழைதொழில் என்ற சொல்லாடல் வானின் உயிர்த்துளியை வருணிக்கிறது. கார்காத்த வேளார்கள் என்றொரு பிரிவினர் மழைத் தொழிலை சிறப்புடன் கையாண்டவர்கள் ஆவார்கள். வானின் உயிர்த்துளி இன்றி மண்ணின் புல்நுனியை கூட காண இயலாது என மழைத் தொழிலின் சிறப்பினை குறளும் முன்மொழிகிறது.*

*காற்று, ஞாயிறு, திங்கள் இவைகளின் சுழற்சி சரியாக அமைகின்ற போது இயற்கை வளர்ச்சி அளவிடற்கரியது என்பதனை,*

***தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய***
***நிலனும் மரனும் பயன் எதிர்பு நந்த***

***(மதுரைக்காஞ்சி 10 - 11)***

*என மாங்குடியார் பாடுகிறார். ஒரே விதை ஆயிரக்கணக்கான விதைகளைத் தருகிறது என்ற இயற்கையின் பேராற்றலை மதுரைக் காஞ்சியில் மாங்குடியார் ஆழமாக பதிவு செய்துள்ளார். விளைநிலங்களும் மரங்களும் உயிரகளுக்கு பயன் கொடுப்பதிற்காகவே தழைக்கின்றன என்ற இயற்கையின் காட்சிப் படுத்தல் கருத்துச்செறிவு மிக்கதாகும். "தாவரம்" என்றாலே வரத்தை தருவனவாகும். "சங்க இலக்கியம் இயற்கை இலக்கியம் ஆகும்."[5] என்பதற்கேற்ப இயற்கையின் அழகினையும் பயனையும் பண்பினையும் சங்க இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன. " இயற்கையை பற்றிய பெரும் நுண்ணறிவின் அடையாளம் தான் சங்க இலக்கியம்"[6] என்பது சு. வெங்கடேசன் கருத்தாகும்.*

*கடல் தொடங்கி மலை உச்சித்தேன்கூடு வரையிலான வருணையை மாங்குடியார் தனது மதுரைக்காஞ்சியில் தந்துள்ளார். இயற்கை ஒன்றை விளைவிப்பதாகும். ஆனால் இனப் போர்களோ அனைத்தையும் அழிவிப்பதாகும். நிலங்களும் மரங்களும் மக்களை வளம் பெறச் செய்வன என்ற கருத்தினை அடுத்ததாக போர்களத்தை மாங்குடியார் காட்சிப்படுத்துகிறார்.*

***பிசை கோட்ட களிற்றுக் குழம்பின்***
***நிணம் வாய்ப்பெய்த பேய் மகளிர்***

***(மதுரைக்காஞ்சி 24 - 25)***

*என்ற பாடல் வரிகள் பேய் மகளிரன் ஆச்சாய முட்டும் போர்க்கள துணங்கைக் கூத்தினை காட்டுகின்றன.*

***"வரைத் தாழ் அருவிப் பொருப்பின் பொருந"***

***(மதுரைக்காஞ்சி 42)***

*என்ற வாயில் வீழ்கின்ற அருவியினை உடைய மலைக்கு வேந்தனே என தலையா லங்கானத்துச் செருவென்ற பாண்டிய மன்னன் விளிக்கப்படுவதை காண முடிகிறது. இயற்கை வருணையோடு மன்னனின் வாழ்த்தினைப் பாடுவதையே மாங்குடியார் மகிழ்வாக எண்ணுகிறார்.*

**வாழ்த்துரையில் இயற்கை**

*மரங்களைத் தீயினால் சுட்டு மலைகளை உடைத்துத்தூசியாக்கும் பெருமையுடைய இடியைப் போன்று உள்ளாய் என பாண்டியனை மாங்குடியார் வாழ்த்துவதை*

***மரம் தின்னூஉ வரை உதிர்க்கும்***
***நரை வருமின் ஏறு அன்னைய!***

***(மதுரைக்காஞ்சி 62 - 63)***

*என மதுரைக்காஞ்சி வரிகள் காட்டும்.*

***சீர் சான்ற உயர் நெல்லின்***
***ஊர் கொண்ட உயர் கொற்றவ***

***(மதுரைக்காஞ்சி 87 - 88)***

*என பாண்டியன் நெல்லூரை கைப்பற்றியதையும் இயற்கை வாயிலாகவே மாங்குடியார் கூறியுள்ளார்.*

***திரை இடு மணலினும் பலரே உரைசால***
***மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே!***

***(மதுரைக்காஞ்சி 236 - 237)***

*கரிய கடலின் அலைகள் ஒலிக்கின்ற மணலினும் பலர் ஆவார்கள். தங்கள் புகழ் எங்கும் பரவும்படி அகன்ற உலகினை ஆண்டு கழிந்தோர் பலராவார்கள் என்ற கூற்று நிலையிலும் மாங்குடியாரன் இயற்கை சாரந்த கருத்தியல் வெளிப்படுவதைக் காண முடிகிறது.*

*கோள்கள் மாறினாலும் நாள் மாறாது விளைச்சல் தரும் நெல்வயல்களைப் பாடுவதிலே மாங்குடியார் மகிழ்வடைகிறார்.*

**ஊர் வருணைகளில் இயற்கை**

மாங்குடியார, ஐந்திணை பகுதிகளில் நெய்தல் நில வருணைகளில் வணிகத்தை முன்னிலைப்படுத்தியுள்ளார். ஆனால் பரதவாகள் வாழக்கூடிய நெய்தல் பகுதிகளை இயற்கை அழகுடனே வருணிக்கிறார்.

**"கயன் அகைய வயல் நிறைக்கும்**

**(மதுரைக்காஞ்சி 92)**

**இரும்புள் ஓம்பும் இசையே என்றும்**
**மணிப்பு முண்டகத்து மணல் மலிகானல்"**

**(மதுரைக்காஞ்சி 95 - 96)**

குளத்து நீரானது வயல்களை நிறைக்கின்றது. விளைச்சலை பாதுகாக்கும் பொருட்டு பறவைகளை விரட்டுகின்றனர். அவ்வோசையே இடத்தின் இசையாகிறது. நீலமணி போன்ற மலர்களை கொண்ட கழி முன்னிச் செடிகளை உடைய மணற் பரப்பானது கடற்கரையில் இருக்கும் பரதவர்குடிகள் என பரதவர்களின் இருப்பிடத்தை இயற்கை அழகோடு மாங்குடியார வருணிக்கிறார்.

**முதுவெள்ளிலை ஊரனைப் பற்றிக்**
**கூறும்பொழுதும்,**
**கல்காயும் கடுவேனிலோடு**
**இருவானம் பெயல் ஒளி ப்பினும்**
**வரும் வைகல் மீன் பிறழினும்**
**வெள்ளம் மாறாது விளையுள் பெருக**
**நெல்லின் ஓதை அரநா கம்பலை**

**(மதுரைக்காஞ்சி 106 - 110)**

என்று விளைநிலங்களை அடிப்படையாகக் கொண்டே மாங்குடியார வருணிக்கிறார். பாணர் இருப்பிடங்களை வருணிக்கும் மதுரைக் காஞ்சி வரிகளிலும் இயற்கையே பின்புலமாகிறது. ஆண் பெண் குரங்குகள் தாவி விளையாடும் மலையுச்சிகளில் மயில்கள் ஆரவாரிக்கின்றன. காட்டுச் சோலைகளில் கோங்க மரத்தின் மலர்களும் ஏனைய மலர்களும் பரவி வெள்ளை மணற் பரப்பானது மலர்படுகையாக காட்சியளிக்கிறது.

வைகைத் துறைகளில் புந்தோட்டங்கள் சூழ இருந்த பெரும்பாணர் குடியிருப்புக்களை மாங்குடியார் மதுரைக்காஞ்சியில் பதிவு செய்கிறார்.

**ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்**

**(மதுரைக்காஞ்சி 359)**

**வையை அன்ன வழக்குடைவாயில்**

**(மதுரைக்காஞ்சி 356)**

என வையை ஆறானது மதுரையின் அடையாளமாக சிறப்பிக்கப்படுவதை காண முடிகிறது.

**வேண்டும் பண்ணியம்**
**நறும் புவொடு மனை மனை மறுககசு**

**(மதுரைக்காஞ்சி 423)**

என்பதில் பண்ணியங்களோடு மலர்களை வைத்து விற்றுள்ளதை இன்றும் மதுரை நகரப் பகுதிகளில் காண முடிகிறது. பழங்கள் காட்சிப்படுத்தும்போது இடையிடையே மலர்களை இணைத்து வைப்பது காண்போரைக் கவரும் வகையில் உள்ளதெனலாம்.

**"வான் வண்கை வளங்கெழுச் செல்வர்"**

**(மதுரைக்காஞ்சி 442)**

இதில் முகிலைப் போன்று வாரி வழங்கும் வள்ளலன்மை பொருந்திய செல்வர்கள் என செல்வர்களின் வள்ளன்மைக்கு முகில்கள் உவமையாக்கப்படுவதைக் காண முடிகிறது. மதுரையிலுள்ள பௌத்த பள்ளிக்கு வரும் பெண்களும் குழந்தைகளும்,

**தாது அணி தாமரைப் போது பிடித்தாங்குத்**
**தாமும் அவரும் ஓராங்கு விளங்க**

**(மதுரைக்காஞ்சி)**

என்றவாறு காட்சியளித்ததாக மாங்குடியார் பாடுகிறார். நல்வா இறாஅல் புரையும்மெல் அடை என இயற்கையோடு உணவுப்பொருள் மதுரைக்காஞ்சியில் (பாடல் வா 624) உவமிக்கப்படுகிறது. யாமத்துக் கொள்ளையாகளின் உடைகரு மலை ஒத்திருந்ததாக மாங்குடியார் கூறுகிறார். இதனை

**சிறந்த கருமை நுண் வினை நுணங்கு அறல்**
**நிறம் கவர்பு பல்மான் சுற்றினார்**

**(மதுரைக்காஞ்சி 639-640)**

என்ற மதுரைக்காஞ்சியின் பாடல் வாகள் காட்டும். இவ்வாடையில் நூல் ஏணியை இறுகக்கட்டியிருந்தனர் என்ற பதிவானது கருமணல் வாசைப்பாடுகளைக் காட்டக் கூடியதாக அமைகிறது.

*ஒவ்வொரு நிகழ்விலும் பாடுபொருளோடு இயற்கை வருணைகள் இரண்டறக் கலப்பதைக் காண முடிகிறது.*

**மதுரைக்காஞ்சியில் ஐந்திணைகளின் இயற்கை வருணைகள்**

*மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் என ஐந்நில இயற்கை அழகினை மதுரைக்காஞ்சி வருணிக்கிறது. இயற்கையோடு இயைந்த மக்களின் வாழ்வியலை இவ்வருணனைகள் வெளப்படுத்துகின்றன. மாங்குடி மருதனிள நாகனார மாங்குடிகிழார் எனவும் அறியப் படுவார. கூடலூர கிழார கோவுரழார என "கிழார்" என்னும் பெயரை தங்களது பெயான் பின ஒட்டாகக் கொண்ட சங்கப் புலவராவர்கள் பலராவார்கள் உழுதுவிக்கும் தொழிலை உடையோரை நிலக்கிழார் என்றழைக்கும் வழக்கு இன்றுவரை உள்ளது. சங்கப்புலவர்களின் பெயர்கள் இன்று வரைத் தொடர்வதைக் காண்கிறோம். கிழார என்ற பெயருடைய சங்கப் புலவாகள் உழவுத்தொழிலோடு தொடாபுடையவாகளாக இருந்தால் இயற்கையை போற்றி தங்கள் பாடல்களில் பாடியுள்ளனர்.*

*இயற்கையோடு உறவுடைய பாடல்களைப் படைத்துள்ளனர். அந்த வகையில் மாங்குடி கிழாரான மாங்குடியாரும் இடம் பெறுவதால் தான் மதுரைக்காஞ்சியில் ஐந்நில வைப்பு முறையில் மருதத்திணையை முன்னிலைப் படுத்தியுள்ளார்.*

**மருதநிலத்து இயற்கை தொழில்கள்**

*நீர் நிலைகளின் காட்சிகளையும் அங்கு விளைகின்ற இயற்கை விளைபொருள்களையும், இயற்கை சார் தொழில்களையும் மருத நிலத்து இயற்கை வருணனைகளின் வாயிலாக மாங்குடியார் காட்சிப்படுத்தியுள்ளார். கீழ்த்திசை கடல்களிலிருந்து முகர்ந்து கொண்டு சென்ற நீரால் மேற்கு திசைகளில் உள்ள மலையை வளைத்துக்கொண்டு இரவு பகலபாராது பெய்கின்ற மழையால் அருவிகள் ஒலிக்கின்றன.*

*அருவிகள் ஆறுகளாகி கலங்கிய நீரோடு வெள்ளப்பெருக்கு ஏற்பட அவ்வெள்ளம் அருகே உள்ள குளங்கள் பொய்கைகளை நிறைக்கின்றன. மீதமுள்ள நீரானது கடலைச் சென்றடைகிறது. "சங்க இலக்கியங்கள் வெறும் பாடல்கள் மட்டுமல்ல அவைகளே அன்றைய நிகழ்வுகளை எடுத்துச் சொல்லும் ஆவணக் களஞ்சியங்களாகும்." 7 என்பதற்கு ஏற்ப சங்ககால நீர் மேலாண்மையை மதுரைக்காஞ்சி,*

***அவலும் மிசையும் நீர்த்திரள்பு ஈண்டி***
***கவலை அம் குழும்பின் அருவி ஒலிப்பக்***
***(மதுரைக்காஞ்சி 240-241)***

***சிதராற் பெரும்பெயல் சிறத்தலின் தாங்காது***
***குண கடற்கு இவர்தரும் குரூஉப்புனல் உந்தி***
***நிவந்து செல்நீத்தம் குளம்கொளச் சாற்றி***
***(மதுரைக்காஞ்சி 244-246)***

***உண்டு இறை கொண்ட கமழ்பும்பொய்கை***
***(மதுரைக்காஞ்சி 253)***

*ஆகிய பாடல்வரிகளில் பதிவு செய்கிறது. நீர் கொள்ளும் பகுதிகளாக அருவி, ஆறு, குளம், பொய்கை, கடல் என நிலவியல் வரையறைப்படி மாங்குடியார் பாடியுள்ளதைக் காண முடிகிறது.*

***"உணவெனப்படுவது நிலத்தோடு நீரே"***
***(புறம் 18.21)***

*என்று கூறப்படுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. நீரன்றி அமையாது உலகு என்பதால் நீரன் வளத்தினை மாங்குடியார் முதலில் பாடியுள்ளார். "கயம் என்பது குளத்தையும் ஏரியையும் குறிப்பதாகும். இந்நீர் நிலை பொதுமக்களுக்கும் கால் நடைகளுக்கும் குடிநீரின் தேவைக்காக உருவாக்கப்பட்டதாகும்."[8] இயற்கையாக வருகின்ற நீரினைத் தேக்கி வைத்து காலந்தோறும் தங்களது தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது.*

*குளங்களில் முள்ளினை உடைய தண்டுகளோடு உயர்ந்து விளங்கும் தாமரை மலர்கள் புத்துள்ளன. தேன் கமழும் நறுமலர்களான நெய்தல் மலர்களையும், பெரிய இதழ்களை உடைய மலர்ந்த நீர்ப்புக் களையும், வண்டுகளையும் உடையதாக பொய்கை விளங்கியது. மலர்களையுடைய*

பொய்கைகளில் கம்புள்சேவல் இனிய உறக்கமுடையனவாகயிருந்தன. மலர்களோடு படர்ந்திருக்கும் வள்ளைக் கொடிகளைத் தள்ளி வலிய மீன்கள் தாவுகின்றன. தாமரை நெய்தல் நீலப்புக்கள், ஆம்பல் புக்கள் வள்ளைக் கொடி ஆகிய தாவரங்கள் பொய்கை அழகில் வருணிக்கப்பட்டுள்ளன.

இதில் தாமரை இலைக்கு மேலே உயர்ந்த தண்டுகள் குறிப்பிடப்படுகின்றன. தண்டின் உயர்ச் நீர்மட்ட உயர்வினைக் காட்டும் அளவுகோலாகும். இக்கருத்தையே

**"வெள்ளத்தனயை மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய உயர்வு"**

**(குறள் 595)**

என்ற குறளும் கூறுகிறது. தாமரைத்தண்டு உணவாகவும் பயன்படக்கூடியது. தாமரைத் தண்டு வத்தல் தாமதை 'தண்டுதிரி' என பலவித பயன்பாட்டிற்கும் உரியதாக தாமரை அமைகிறது. இதயம், மூளை நரம்புகளில் செயல் பாட்டிற்குரிய தாலின் தாமரை மலர்கள் ஏந்திய கடவுள் சிலைகளும் மாந்தர் சிலைகளும் கோயில்களில் வடிவமைக்கப்பட்டன எனலாம். தேன் கமழும் நெய்தல் என நெய்தல் மலர்கள் கூறப்படுகின்றன. பெரிய இதழ் களையுடையதாக நீலப்புக்கள் மலர்ந்துள்ளன. மெல்லிய இலைகளை உடையதாக ஆம்பல் மலர்கள் அழகு தருகின்றன. இந்தக் காட்சிகளை,

**ஒளி று இலஞ்சி அடை நிவந்த**
**முள்தாள் சுடர்த்தாமரைகள்**
**கமழும் நறுநெய்தல்**
**வள் இதழ் அவிழ் நீலம்**
**மெல் இலை அரி ஆம்பலோடு**
**வண்டு இறை கொண்ட கமம்பும் பொய்கை**

**(மதுரைக்காஞ்சி 248-253)**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்தும். இக்காட்சிகள் அக்காலப்பறவைகள், தாவரங்கள் மற்றும் சிறுசிறு உயிரினங்களைப் பதிவு செய்கின்றன. இதுவே தமிழரின் பிரபஞ்ச வாழ்வியலை பிரதிபலிக்கிறது. உலகம் மனிதருக்கு மட்டுமல்லாது அனைவருக்குமானது அதனை இயற்கையோடு காப்பது மனித இனத்தின் கடமையாகும். "கமழ்பும் பொய்கை" நீரானது சுத்தமான தாவரக் குடிநீராகி மக்களுக்கு நலம் பயக்கிறது. தாவரங்கள், பறவைகள், வண்டுகள்ஈ கம்புள் சேவல் மீன்கள் என சூழ்நிலை மண்டலத்தின் வாழ்வியலை உணர்த்துவனவாக மருத நில இயற்கை வருணைகள் அமைகின்றன.

மருத நிலங்களை ஒட்டியுள்ள மலைகளில் மூங்கில்கள் வளர்ந்துள்ளன. அடர்ந்த வனப் பகுதிகள் யானைகளை நடுங்குற செய்யும் வண்ணம் இருந்தன. மருத நிலங்களில் "கவலைக்கிழங்குகள்" குவிந்து விளைவதை மாங்குடியார் காட்சிப்படுத்துகிறார். (பாடல் வரி 241) இக்கிழங்குகள் படை வீரர்களுக்கு உணவாகி உள்ளதையும் மதுரைக்காஞ்சி பதிவு செய்கிறது.

பொய்கையிலே வலைஞர் மீன் பிடிக்கின்றனர். அதனருகே உள்ள பகுதிகளில் பல்வேறு தொழில்களின் ஒலிகள் கேட்பதை

**வேழப்பழனத்து நூழிலாட்டு**
**கரும்பின் எந்திரம் கட்பின் ஓதை**

**(மதுரைக்காஞ்சி 257-258)**

என மதுரைக்காஞ்சி விவரிக்கிறது. சேற்றில் அகப்பட்ட எருதுகளின் துன்பத்தை நீக்கும் உழவர்கள் வாழும் மருதநிலப்பகுதிகளின் வயல்களில் பகன்றைச் செடிகள் தழைத்திருந்தன. நெல்முற்றிய வயல்கள், முகில்கள் பெய்யும் திருப்பரங்குன்றத்தின் விழாக்களின் ஒலிகள், குருகுகளை அழைக்கும். பாணர் குடியிருப்புக்கள் என மருதநில வருனணைகளை ஓசைகளைக் கொண்டு மாங்குடியார் காட்சிப்படுத்தியுள்ளார்.

### முல்லை நில வருணைகள்

இந்நிலத்தில் விளைவிக்கப்பட்ட பயிர்களை காட்சிப்படுத்தி இயற்கையின் செயல்திறனை தனது பாடல் வரிகளில் வெளி ப்படுத்துகிறார் மாங்குடியார் என்றே கூறவேண்டும். சிறு திணைக்கதிர்கள் என்பதால் தான் சிறு தானியங்கள் என பெயர் பெற்றன போலும். எள்ளின் காய்கள் முற்றியவுடன் கருமை அடைந்தன. வரகின் தாள்கள் கருமை நிறமுடையனவாக இருந்தன என நிறத்தின் தன்மை கூட பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

*பொன் மான் போன்ற நௌவி மான்கள் முல்லைக்காட்டில் துள்ளி விளையாடியதை மதுரைக்காஞ்சி கூறுகிறது.*

*ஒளியுடைய கொன்றை மலர்கள் பாறையில் அழகு பெறக் கிடந்தன. அவற்றோடு நீலமணி போன்ற பசுமையான பயிர்கள் வளர்ந்துள்ளன. வெள்ளியின் மலர்களாக முல்லை மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன. முறுக்கான அரும்புடைய முசுண்டை மலர்கள் பரவியுள்ளன. நீலமணி போன்ற நெய்தல் மலர்கள் கிடக்கின்றன. அவற்றிடையே தொய்யில் கொடி மலர வேலன் வெறியாட்டுக் களமாக புக்களின் காடு திகழ்ந்ததை மாங்குடியார் விவரித்துள்ளார்.*

***சுடர் புங்கொன்றை தாஅய நீழல்***
***பாஅயன்ன பாறை அணிந்து***
***நீலத்து அன்ன பைம்பயிர் மிசைதொறும்***
***வெள்ளி அன்ன ஒள்வீ உதிர்வது***
***முல்லை சான்ற புறவு***

***(மதுரைக்காஞ்சி 277 - 280)***

*என்ற பாடல் வரிகளில் விளக்குகிறார். ஓசைகளின் அடிப்படையில் மருதநிலக் காட்சிகளை பதிவு செய்தவர் நிறங்களின் அடிப்படையில் முல்லை நிறக் காட்சிகளைப் பதிவு செய்கின்றார்.*

### குறிஞ்சி நில இயற்கை வருணைகள்

*நறுமணமுடைய அகில், சந்தன மரங்கள் வெட்டப்பட்ட மேட்டுநிலத்தில் விவசாயம் நடைபெற்றுள்ளது. குறியகதிர்களை உடைய தோரை நெல், ஐவனம் என்ற வெள்ளை நெல்லும் விளைவிக்கப்பட்டுள்ளன. வெண் கடுகுச் செடியானது நீண்ட தண்டினை உடையதாக உள்ளது.*

*நெல் பயிர்களோடு பிணங்கி வளர்ந்தனவாக இஞ்சியும் மஞ்சளும் மிளகுகொடிகளும் உள்ளன என்ற இயற்கை வருனணையானது தமிழர்களின் வேளாண் தொழில் நுட்பத்தைக் காட்டுகிறது. பயிர்கள் ஒன்றோடு ஒன்று கலந்து வளரும் போது ஊட்டச்சத்து குறைபாடும் நீக்கப்படும். பயிர் பாதுகாப்பும் கிடைக்கும் என்ற வேளாண் அறிவியல் நுட்பத்தை குறிஞ்சி நில இயற்கை வருணனைக் காட்சிகள் வெளிப்படுத்துகின்றன. திணை விளையும் மலைப்பக்கங்களில் கிளியை விரட்டும் ஓசை மிகுந்துள்ளது. இது திணையின் விளைச்சலைக் காட்டுகிறது. கரியபன்றிகளை மனிதர்கள் கொன்றுள்ளனர். புலிகளும் பன்றிகளைக் கொன்றுள்ளன. அவரைப் மணிபோல புக்கிறது. அவரைச் செடியின் தளிர்களை மேயவரும் காட்டுப்பசுக்களை அவர்கள் விரட்டியுள்ளனர். கிளி கடிதல் பெண்கள் வேலையாகவும் பசுவிரட்டல் ஆடவர் வேலையாகவும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.*

*குறிஞ்சி என்றாலே வேங்கை மரங்கள் மிகுந்து காணப்படும் என்பதனை மதுரைக் காஞ்சியும் கூறுகிறது. வேங்கை மரத்தின் மலர்களை பெண்கள் பறித்துள்ளனர். வெள்ளை நிறமுடைய நீர்வீழ்ச்சிகள் இருக்கின்ற இடத்தில் கரிய தண்டினை உடைய குறிஞ்சி புக்கள் காணப்படுகின்றன.*

### பாலை நெய்தல் நில இயற்கை வருணனைகள்

*யானைகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அழைத்துச் செல்ல இசைக் கருவிகளை பயன்படுத்தியுள்ளனர். மூங்கில்கள் யானைகளின் உணவானதை பாலை நில காட்சிகள் வெளி ப்படுத்துகின்றன.*

*நெய்தல் நில வருணனையில் இயற்கை காட்சிகளை விடுத்து வணிகத்திற்கே முக்கியத்துவம் தந்துள்ளார் மாங்குடியார் எனலாம். முத்து எடுத்தல், சங்கு அறுத்தல், உப்பு, புளி விற்றல் மற்றும் மீன் துண்டுகள் விற்பனை நெய்தல் நில காட்சிப்படுத்தலில் இடம் பெறுகின்றன. மருத நிலங்கள், முல்லை நிலங்கள் மற்றும் குறிஞ்சி நிலங்களைப் பற்றியே மாங்குடியார் தனது மதுரைக் காஞ்சியில் அதிகம் வருணனை செய்துள்ளார் என்பதனை அறிய முடிகிறது.*

*இயற்கை சார் வாழ்வியல், இயற்கை சார் தொழில்கள், இயற்கை சார்ந்த பொழுது போக்கு என மதுரைக்காஞ்சியில் இயற்கை வருணனைகளை மாங்குடியார் பதிவு செய்துள்ளார். தமிழர்களின் நுட்பமான உயிரியல் அறிவு வெளி ப்பாடு இதன் மூலம்*

*புலப்படுத்தப்படுகிறது. தங்கள் பெயரோடும், ஊரோடும், வாழ்வியல் பகுதிகளோடும் இயற்கையை இணைத்துக் கொண்டனர். இயற்கையோடு இணைந்த தோழமை தமிழர்களையும் தமிழர் பகுதிகளையும் காத்து நின்றன என்றால் மிகையாகாது.*

## குறிப்புகள்


1. *செ. மாணிக்கராஜ் - குறிஞ்சிபாட்டில் இயற்கை* https://www.9e0tamil.i-18dec22
2. eluthu.com.https://eluthu.comkavithai-17 may 2017
3. *சு. பேச்சியம்மாள், இலக்கியத்தில் சூழலியல் பதிவுகள் - அறன் பன்னாட்டு ஆய்விதழ்* 31,oct 2019
4. *இலக்கிய அழகியல் இயற்கையின் அரசியல் அக்-292014* https://www.vinavu.comnature
5. *அர்ச்சனா சங்க இலக்கியம்* pothunalam.com 31jan2024
6. *இந்து தமிழ்திசை 10 பிப்ரவரி 2024*
7. *தமிழ்களம், சங்க இலக்கியங்களில் பறவைகள்* 21jan2022
8. *ஆ. மணவழகன், சங்க இலக்கியத்தில் வேளாண் மேலாண்மை* 1/8/2020 tamizhiyal https://tamizhiyal.com